சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அசு] யாழ்ப்பாணம்:- ஆனந்த ஞு ஆனிமீ உஅ-உ வெள்ளிக்கிழமை (12 - 7 - 1974) [இல: கங

# வெள்ளி விழாவின் சாதனைகள்

## சிந்தனை உயர வழி

அண்மையில் யாழ். மாநகர வெள்ளி விழா நடைபெற்றபொழுது ஔவையார், திருவள்ளுவர், மகாத்மாகாந்தி, ஆனந்தகுமார சுவாமி ஆகியவர்களுடைய சிலைகள் பிரதான இடங்களில் நிறுவப்பட்டன.

ஔவையாரும் திருவள்ளுவரும இரு சகோதரர்கள். உலக சுபீட்சத்திற்கு இருவரும் இயற்றிய நூல்கள் ஒப்புயவற்ற கருத்துக்களை வழங்குகின்றன.

மகாத்மா காந்தி உணர்வாலும், செயலாலும் ஒரு தலைசிறந்த ஞானபுருஷன். பளிங்கு போன்ற உள்ளம் படைத்தவர். உலகுக்கு ஒரு வழிகாட்டி.

ஆனந்தக்குமாரசுவாமி கீழைத்தேச தத்துவ ஞானத்தினதும், கலையினதும் பெருமையை உலக மக்களுக்கு தாம் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் மூலம் பரப்பி பாரத நாட்டுக்கும், ஸ்ரீ லங்காவுக்கும் பெருமையீட்டியவர்கள். இச் சிலைகளை பார்ப்பவர்கள் உள்ளத்தில் உயர்ந்த கருத்துக்களை உற்பத்தியாகும்,

உயர்ந்த கருத்துக்கள் மக்களை நல்லனவற்றை புரிதற்கு தூண்டுகோலாகும். நல்லன புரிந்தால் மக்கள் நல்லொழுக்கமுடையவராவர். — —



## எம் பண்டிதமணி வாழ்க

"இறை — ஒளி"

நல்லாண் டெழுபான்மேல் நாவலனார் தொன்மரபிற்
சொல்லாற் செயலாற் றுறைபோய — வல்லாரை
எல்லோரும் எம்பண் டிதமணி யென்றழைப்பர்
பல்லாண்டு வாழ்கஅவர் பார்.

# சுயமொழியில் வழக்குகளை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்

## சட்டத் தரணிகள் மத்தியில் நீதி அமைச்சர்

"சுய மொழிமூலம் வழக்குகளை நடாத்துவதற்கு வேண்டிய நிர்வாக நடவடிக்கைகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தென்னிலங்கையிற் கூட சிங்கள மொழி மூலம் வழக்குகளை நடாத்துவதற்குப் போதிய வசதிகள் இல்லை" என்று திங்கட்கிழமை [8-7-74] காலை யாழ்ப்பாணம் உயர் நீதி மன்றத்தில் சட்டத் தரணிகளுடன் நடைபெற்ற உரையாடலின்போது நீதிஅமைச்சர் மாண்புமிகு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

யாழ்ப்பாண மாநகர சபை வெள்ளி விழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணம் வந்த நீதி அமைச்சர் 8-ஆம் திகதி காலை யாழ்ப்பாணம் உயர் நீதி மன்றத்திற்கு விஜயம் செய்திருந்தார்கள். அங்கு உள்ளூர் சட்டத் தரணிகளுடன் கலந்துரையாடியபொழுது சட்டத்தரணி இராஜராஜேஸ்வரன் தங்கராசா அவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள சட்டத் தரணிகள்

வளர்ச்சி 2-ம் பக்கம்

நேயர் நெஞ்சம்

## ஆவணியில் சுப கருமங்கள் செய்ய விதியுண்டு

ஒரு மாதத்தில் இரண்டு அமாவாசைவரின் மல மாதம் என்ன பெயர். ஆனால் இவ்வானந்த வருஷம் ஆவணி மாதம் இரண்டு அமாவாசை வரின் அதிக மாதம் அல்லது மல மாதமென்று பெயர்.

யாதொரு கிரகம் உச்சமாயிருந்தால் சுப கருமங்கள் செய்யலாமென்று 'கால விதானமென்கிற நூலில் தோஷ அபவாதம் கூறப்பட்டிருக்கிறது. ஆதலால், இந்த ஆவணியில் சகல சுப கருமங்களும் செய்யலாம.

இங்ஙனம்,
செ. இராசதுரை,
சுத்தவாக்கிய பஞ்சாங்ககணிதர்.
கொக்குவில், 11-7-74.

## திருவிழா ஆரம்பம்


யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராசராஜேஸ்வரியம்பாள் கோவில் வருடாந்த மகோற்சவம் (13-7-74) சனிக்கிழமை கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகும், ஆடிப் பூரத்தன்று தீர்த்தோற்சவமும் அதற்கு முதல்நாள் இரதோற்சவமும் இடம் பெறும். (ந. நி)

## இந்து இளைஞர் பேரவை

அகில இலங்கை இந்து இளைஞர் பேரவையின் புதிய தலைவராக துரைராஜா - ஸ்கந்தகுமார் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். பொதுச் செயலாளர் திரு. ச. ஞானனந்தன்.

## சிவதர்ம சீலர் சமாதான நீதிபதியானர்

நட்புக்கு இலக்கணம் வகுத்த வள்ளுவர் "உடுக்கை இழந்தவன் கைபோல் இடுக்கண் களைவதாம் நட்பு" என்றார். உடை நழுவுகின்ற நிலையில் கையானது எவ்வளவு வேகமாகச் சென்று அதனை தடுக்கின்றதோ; அதே போன்று எந்த உருவத்தில் என்றாலும் உதவி தேவை என்ற நிலை எங்கு ஏற்படுகின்றதோ அங்கே "மில்க்வைற்" சவர்க்காரத் தொழிலக உரிமையாளர் திரு. க. கனகராசா அவர்களைக் காணலாம்.



அனாதைகள் ஆச்சிரமமா, ஆலயமா, கல்விக் கூடமா, கலைக் கூடமா, எழுத்தாளர் அரங்கமா, குளத்தை ஆளமாக்கும் திட்டமா, மருத்துவ மனையா, பொது வைபவமா எங்கிருந்து அழைப்பு வந்தாலும் அங்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கென்று தனித்தனிக் குழுவையே தயாராக வைத்திருக்கின்றார் திரு. க. கனகராசா அவர்கள். சஞ்சிகைகளுக்கு விளம்பரம் வேண்டி நாடியவர்கள் வெறுங் கையுடன் திரும்பியது கிடையாது. நல்ல நோக்கத்துக்கு நால்வர் சென்றால் நல்லபடி நடாத்தப்பட்டே அனுப்பப்படுகின்றார்கள். பொதுப்பணியிற் சிக்கனம் என்ற வார்த்தை அவர் அகராதியிற் கிடையாது. கடல்கடந்த நாட்டினரும் இவரது வள்ளற்றன்மையை சுவைத்துள்ளனர்.

அவரை நாடிச் செல்பவர்கள் எத் தரத்தினராயினுஞ் சரி, எவ் வயதினராயினுஞ் சரி இன்முகங் காட்டி இனிது வரவேற்க அவர் என்றும் தவறியது கிடையாது. கணீர் என்ற அவரது துனித்துவமான குரல் அவரை எந்தக் கூட்டத்திலும் இனங்காட்டி விடும. எந்நேரமும் கலகலப்பாகவே காட்சியளிப்பார். கவலையில்லா மனிதர் என்றால் அது திரு. க. கனகராசா அவர்களேதான்.

பொருளாதார அபிவிருத்தி, சமய வளர்ச்சி அவரது இரு கண்கள். இதற்காக நூற்றுக்கு மேற்பட்ட துண்டுப் பிரசுரங்களையும், சிறு நூல்களையும் இலவசமாக வெளியிட்டுள்ளார்கள்.

ஒழுக்கம், கட்டுப்பாடு என்பன அவரது தாரக மந்திரங்கள், தொடர்ச்சியாகப் புகை பிடிக்கும் பலர் அவர் கூடச்செல்லும் நேரத்தில் பல மணிநேரம் புகைப் பிடிக்காது இருந்த சம்பவங்கள் பல.

இவரது பொதுத் தொண்டினையும், வள்ளற்றன்மையினையும் மக்கள் என்றோ உணர்ந்துவிட்டனர். சிவதர்ம சீலர், சிவதர்ம வள்ளல் போன்ற பட்டங்கள் இதற்கு உதாரணம். இலங்கை அரசு இன்று தான் அன்னாரது சேவையினை உணர்ந்து 'சமாதான நீதவான்' என்ற விருதை வழங்கியிருக்கின்றது. இந்த நல்ல சந்தர்ப்பத்தில் திரு. க. கனகராசா அவர்களது பொதுப் பணியும், வள்ளற்றன்மையும் பல சகாப்தங்கள் தொடர அருளபாலிக்க வேண்டுமென இறைவனை இறைஞ்சுவோமாக.

# சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையக முந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

ஆனந்த ஸ்ரீ ஆனி மீ உஅ-உ வெள்ளிக்கிழமை [1974]

## பண்டிதமணிக்குப் பல்லாண்டு

இறை நெறி வழுவா ஆசானாய், அவ்வழி ஆசிரியர்களுக்குப் பேராசிரியனாய் அயரா துழைத்துத் தமிழகத்துக்குப் பெரும் பணியாற்றிய பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் எழுபத்தைந்தாண்டுகள் என்ற வாழ்க்கை வழியில் ஒரு குறிக்கல்லைத் தாண்டி இன்னமும் நெடுந்தூரம் செல்லத் திருவருள் பாலித்திருப்பதைத் தமிழினம் உள்ளத் துவகையுடன் வாழ்த்துகின்றது.

ஆசானாயமர்ந்ததுறை அமைப்பிலே பண்டிதமணி அவர்கள் பழைய மரபின் எழிலை எதிலும் எப்பொழுதிலும் துலங்க வைத்திருக்கின்றனர் என்பதே அன்னாரின் வாழ்க்கை வளத்தின் சீராகும். நற்றமிழ்நடை தந்த நாவலப் பெருந்தகையார் சற் சமய நெறி மரபினை வளர்க்கவே வாழ்ந்து வந்தனர். கற்றோர் பாரம்பரை ஒன்று, அன்றுதொட்டுத் தொன்றுவழங்கிய பண்பை, நாவலர் மரபெனப் போற்றி வளர்த்தது. அந் நெடுங்கொடி தமிழக வரலாற்றில் முன்னணியில் விளங்குவதொன்று. நாடும் மொழியும் சைவ ஞானமும் விளங்க வழி காட்டிய நாவலர் நற்றகையார் நிறுவிய பாடசாலையிற் கற்றவர்கள் பற்றிய பண்புதான் பண்டிதமணி அவர்களுக்குற்றது.

நல்லூருக்கு நன் மரபு நாவலர்நகர் ஆதல்போல் மட்டுவிலுக்கும் மகத்தான பண்பு உரையாசிரியர் வேற்பிள்ளை வாழ்ந்தமையால் உண்டு புலோலிக்கும் புகழ், புலவர் வ. குமாரசுவாமிப்பிள்ளை, சைவ சித்தாந்த வல்லுநர் சு- சிவபாதசுந்தரம்பிள்ளை என்பவர்களாலாயினது.

திருநெல்வேலிக்கும் இத்தகைய சிறப்பு இயல்பாயமைந்தது. ஞானப்பிரகாச சுவாமிகள் வாழ்ந்த பூமியிற் சைவமும் தமிழும் பழம் பண்பிற் பயிற்றும் பேராசான் பண்டிதமணி அவர்கள் வளர்ந்து வருவது குறிப்பிடத் தக்கது.

பண்டிதமணிக்கு பல்லாண்டு கூறத் தண்டமிழ் மக்கட்குண்டு கடமை. நாவலர்பெருமான் சைவமுந் தமிழுங் காத்து முன்னணி முயற்சி செய்தார். பின் சித்தாந்தச் செம்மல் சிவபாத சுந்தரனார் அந்நெறி நின்று காவல் புரிந்தனர். இன்று சைவ சித்தாந்தக் கோட்டையைக் காப்பதற்கென்றே பண்டிதமணி பயிற்றப்பட்டு வந்திருக்கின்றனர். அந் நாளிலே ஒரு கோணத்திலிருந்துதான் சைவத்தைத் தாக்கும் குழப்பங்கள் தோன்றின. ஆனால் இந் நாளிலோ கோணங்கள் பலவாயின. தனக்கென ஒரு மதமெனப் பலப்பல விபரீதமாய் சமயப் பெயர் தாங்கிய சங்கங்கள் உண்டாகிவிட்டன. மக்களை மயங்க வைக்கின்ற மாயா வாதிகள் போன்று மதத்தைக் கூறு படுத்தும் இவ் வேளையில் சைவ சித்தாந்தக் கோட்டைத் தளபதியாகக் கடமை புரியக்கூடியவர் பண்டிதமணி கணபதிப்பிள்ளையவர்களே. அவர் ஓர் கலா யோகியாகக் காட்சியளிக்கின்றார் எம் மததியில். ஆகவே பண்டிதமணிக்குப் பலலாண்டு கூறுதும்.

○ ✳ ○

## நாடு நலனுண்டாக வழி

அண்மையில் பாரதப் பிரதமரும் ஸ்ரீ லங்காப் பிரதமரும் கச்சதீவுபற்றிச் செய்துகொண்ட ஒப்பந்தம் நமது நாட்டில் சகல மக்களுக்கும் பெரு மகிழ்ச்சியை உண்டாக்கி விட்டது. இரு நாடுகளுக்கு மிடையிலுள்ள உறவு பெலப்படுத்தப்பட்டுவிட்டது. பாரதப் பிரதமரின் அரசியல் ஞானம் போற்றத் தக்கது. அவர் செய்து கொண்ட ஒப்பந்தத்தை அந்நாட்டில் தி. மு. க. கட்சி உட்படச் சில கட்சிகள் வன்மையாக எதிர்க்கின்றன. பாரதப் பிரதமர் 'To do a great right do a little wrong' என்ற ஆங்கில முதுமொழியின்படி. பெரும் நன்மையைக் கோரி சிறு பிழையை இழைத்துவிட்டாரென்று கூறி யாவரும் இன்புற வேண்டும்.

தமிழர் கூட்டணித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களும் கச்சதீவு ஒப்பந்தத்தை ஆதரிக்கும் வகையில் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளனர். அவருடைய அரசியல் ஞானத்துக்கு அவருடைய அறிக்கை தக்க சான்றாகும். தமிழர் கூட்டணி தமிழ் நாட்டுத் தலைவர்களுடன் சேர்ந்து தமிழர் உரிமையைப் பெறவும் நாட்டைப் பிரிக்கவும் முயற்சி செய்கின்றதென்ற எண்ணம் திரு. எஸ். ஜே. வி. அவர்களின் அறிக்கையினால் மறுக்கப்பட்டு விட்டது. அண்மையில் யாழ்ப்பாணம் மா நகர சபை வெள்ளி விழாவில் கலந்துகொள்ள வந்த நீதியமைச்சர் திரு. பீலிக்ஸ். டயஸ். பண்டாரநாயக்கா அவர்களும் தமிழர்கள் கச்சைதீவுபற்றிக் கொண்டுள்ள அபிப்பிராயத்தை உணர்ந்துவிட்டார். அதன் பேறாக அவர் ஒரு நல்ல கருத்தை வெளியிட்டுள்ளார். கச்சதீவு பிரச்சினை எவ்விதம் சுமுகமாகத் தீர்க்கப்பட்டதோ அதே முறையில் நாட்டில் இன வொற்றுமைக்குப் பங்கம் உண்டாக்கும் பிரச்சினைகளும தீர்க்கப்படுதல் வேண்டும். தமிழ்மொழி யுரிமைகளை வழங்குவதற்குத் தென் இலங்கையில் சில கட்சிகளுண்டென்பதை யறிந்த மந்திரியவர்கள் அங்குள்ள மக்களுக்கு தமிழர்கள் பிரச்சினையை எடுத்துக் கூறுவதற்கு திரு. எஸ். ஜே. வி. அவர்களையும் பிற தமிழ்த் தலைவர்களையும் அழைத்துள்ளனர். நமது நாட்டில் இன ஒற்றுமைக்காக அயராது உழைத்து வரும் பிரபல கொழும்பு சட்டத்தரணி திரு. சு. சிவசுப்பிரமணியம் அவர்களும் அடிக்கடி பத்திரிகைகளில் கனம். மந்திரியவர்களுடைய கருத்தை யாதரித்துக் கட்டுரைகள் வெளியிட்டுள்ளனர். திரு. பீலிக்ஸ். டயஸ். பண்டாரநாயக்கா அவர்கள் ஒரு அரசியல் ஞானி. சட்ட நூல வல்லுநர் அண்மையில சட்ட நிருவாகத்தில் அநேக மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளார். அவருடைய வருகையைப் பயன்படுத்துதல் நன்று. இன ஒற்றுமைக்கு ஆன வழி பிறக்கும். நாட்டில் வளம் பெருகுவதற்கு இன ஒற்றுமை மிக அவசியம். இன ஒற்றுமை உற்பத்தியாக [illegible] ப்பினர் தலைவர்கள் ஒன்று [illegible] செயல [illegible] ம்.

## சுய மொழியில் வழக்குகளை நடத்த

1ஆம் பக்கத்து வளர்ச்சி

தமிழ்மொழியில் வழக்குகளை நடாத்த விரும்பவில்லை என்ற பொருள்பட பொறுப்புள்ள சிலர் பல சந்தர்ப்பங்களில் கூறியதை ஆட்சேபித்ததுடன் "உண்மையில் யாழ்ப்பாண சட்டத் தரணிகள் தமிழ்மொழியிலேயே வழக்குகளை நடாத்த விரும்புகின்றார்கள். இவர்கள் தத்தம் வீடுகளில் வழக்குகளை தமிழ் மொழியிலேயே தயார் செய்கின்றார்கள்" என்று குறிப்பிட்டார்கள்.

மேலும் சட்டத் தரணி இராஜ ராஜேஸ்வரன் தங்கராசா "தறபொழுது ஆங்கிலத்தில் வழக்குகள் நடைபெறுவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன, ஒன்று போதியளவு தட்டெழுத்தாளரும் சுருக்கெழுத்தாளரும் இல்லாமை. மற்றது சட்டங்களும் சட்ட அறிக்கைகளும் தமிழில் அச்சிடுவிப்பதில் ஏற்படும் தாமதமுமாகும்" என்றார்.

இதற்கு நீதி அமைச்சர் பதிலளிக்கையில் "சுயமொழி மூலம் வழக்குகளை நடாத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன சிங்களப் பகுதிகளிலும்கூட இக் குறைபாடுகள் உள்ளன. எந்தப் பகுதியினரையோ அல்லது வர்க்கத்தினரையோ குறைசொல்ல நான் எத்தனிக்கவில்லை. எல்லோரதும் குறைபாடுகளை நல்லெண்ணத்துடன் தீர்க்கும் நோக்கத்துடனேயே இங்கு வந்துள்ளேன்" என்றார். ——

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம். உரும்பிராய் வடக்கு, காத்திகேசு தம்பு
வழ, இல. M. B. 10394 எதிராக —வழக்காளி
உரும்பிராய் வடக்கு (1) பொன்னம்பலம் வில்லவராயன்
ஆனைக்கோட்டை, உயரப்புலம் (2) பொன்னம்பலம் வயிரவநாதன் (3, பாலேந்திரா பரமேஸ்வரி (4) பரமநாதன் மகள இராசேஸ்வரி
—எதிராளிகள்

M, B. 10394ம் இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழக் காணும் ஆதனம் 1974ம் ஸ்ரீ ஓகஸ்ற் (ஆவணி) மீ 6ம் திகதி (1974-08-6) செவ்வாய்க்கிழமை முற்பகல 10-00 மணி தொடக்கம் அவ்வாதனத்துள்நின்று பிரசித்தஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 7,670/- மேலும் 5000/- ரூபாவுக்கு 23-10-68 தொடககம 10-10-70 வரைககும் வருடமொன்றுக்கு 6 வீத வட்டியும் அதன்பின் சேர்ந்த முழுத் தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 762 - 65 சதம பவுண்டேச் மற்றும் விற்பனைக்குரிய சலார்களும், இதில் ரூபா 147/- கழித்து மிகுதி.

### ஆதன விபரம்

வடமகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று உருமபிராய் இறை 'இலுப்பை நின்றபுலம்' நிலப்பரப்பு 12¼ பயிர்களும் அதைச் சேர்ந்தவைகளுடன் சொரியலாய் அரைவாசிப் பங்கு இதற்கு எல்லை கிழக்கு: குலநாயகம் மனைவி சிவஞானத்தினுதனம்; வடக்கும் மேற்கும்:- ஒழுங்கை, தெற்கு:- பொனனம்பலம மனைவி தையலம்மாளினுதனம். பதிவு;- K. 208/259

வி செ. குட்டிப்பிள்ளை
கொமிஷனர்,
ஏல விற்பனவாளரும,
விலைமதிப்பாளரும்

"இராசகிரி"
643, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
13-6-74 160—74

## பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டிக்கு வாழ்த்து

அண்மையில் மாத்தளைக் கந்த சுவாமி கோவிலில் (கொக்குவில்) திருவிழாவில் உரை நிகழ்த்திய செஞ்சொற் செம்மணி பண்டிதை [செல்வி] தங்கம்மா அப்பாக்குட்டி "அருணகிரி நாதர் அருள் நிலையிலிருந்து கந்தரலங்காரம் பாடினார். அநுபூதி நிலையிலிருந்து கந்தரனுபூதி பாடினார்.

"உருவாய் அருவாய் உளதாய் இலதாய்' - என்னும் கந்தரனுபூதிப் பாடல் எல்லா முருகன் கோவில்களிலும் பாடப்பட வேண்டும்" என்று கூறினார்.

அவரை வரவேற்றுப் பேசிய திரு. ஷண்முக குமரேசன் பண்டிதை மலேஷியாவிலும் தமிழ்நாட்டிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்திச் சொந்த நாட்டிற்குப் புகழ் கொண்டு வந்ததைக் குறிப்பிட்டார்; மாத்தளைக் கந்தசுவாமி கோவலடியார் சார்பில் வாழ்த்துப் பா வழங்கினார்,

கோவில் முகாமையாளர் திரு, சு. சிவநேசனும் பண்டிதையை உபசரிததார்.

அடியார்கள் சார்பில அன்பளிப்பாக இரு நூல்கள் தங்கம்மா அவர்களுக்கு அத் திரு விழாவில் வழங்கப்பெற்றன,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்.

இல: M, B. 13639
சரவணமுத்து வீரசிங்கம், 15, விக்ரோறியாரோட், யாழ்ப்பாணம்
— வழக்காளி
எதிராக
1: வேலுப்பிள்ளை மாணிக்கம் அவரது மனைவி 2. சிவபாக்கியம் இருவரும் 32, பலாலி ரோட் யாழ்ப்பாணம் — எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் M B. 13639ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1974ம் ஆவ ஆகஸ்ட் மீ 13ம் திகதி (13-8-74) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள்நின்றுபிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 4579/-ம் 31—1—1973 தொடக்கம் 21 - 8 —1973 வரைக்கும் ரூபா 4075/-க்கும் 1½ வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 475 - 35 இதில் கழிவு ரூபாய் 155/-

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தெற்கு இறை ஆலடிபபுலம் நிலப்பரப்பு 4ம் குளி 14¾யும் இதில் பிரிக்கப் பட்ட நிலப்பரபபு 2 இது உலாந்தா எம், அலோசியஸ் அவர்களால் தயாரிக்கப்பட்ட 20-7-49 திகதிய 1414ம் இலக்கப் படத்தில் 2ம் துண்டாகக் கிழக்குப் பக்கத்தில் காட்டப்பட்டுளளது. இந்த நிலப்பரப்பு இரண்டும் வீடும குசினியும், கிணற்றில் அரைப் பங்கும், மலசல கூடத்தில் தெற்குப் பகுதியும் வான்பயிர் செய்பயிர்களும இந்த நிலப்பரப்பு இரண்டைக் கொண்ட 2ம் துணடுககு எல்லை கிழக்கு:- தம்பிராசாவினதும் மற்றையோரினதும் ஆதனம, வடக்கு:- குறித்த படத்தில் 1ம் துண்டாகக் காட்டப்படும கனகர் செல்லத்துரையின் ஆதனம, மேற்கு:- ஒழுங்கை, தெற்கு: கதிரேசு பெண நோ ஏலுப்பிள்ளையின் ஆதனம்.

க. சிவஸ்கந்தா
நீதிமன்ற விற்பனை
ஆணையாளரும. மதிப்பாளரும்
நாகேந்திரமடம் 6-7-74
வட்டுக்கோட்டை 115—74

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடைவு நகை ஏல விற்பனவு

அரசாங்க உத்தரவுடன் இல: 24 (89), முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் அடைவு பிடிக்கும் திருமதி. மு. சுப்பிரமணியம் அவர்களின் அடைவு கடையில், 1969ம் ஆண்டு ஆனி மீ 28ம் திகதி தொடக்கம் 1973ம் ஆண்டு சித்திரை மீ 30ம் திகதி வரை அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் அடைவு நகைகள் யாவும் என்னால் 1974ம் ஆண்டு புரட்டாதி மாதம் 11ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் ஷை அடைவு கடையிலிருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வை. ஏரம்பமூர்த்தி
ஏல விற்பனையாளர்,
காரைநகர். 10-7-1974 Auctioneers

## Commission Sale
## கோட்டுக்கொமிஷன் விற்பனவுவிளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழக்கு இல: 12416

கந்தவனம் கைம்பெண் சிவக்கொழுந்து,
ஆத்தியடி, புலோலி மேற்கு, பருத்தித்துறை —வழக்காளி
எதிராக
தம்பிராஜா கதிரமலைராஜா, புலோலி கிழக்கு
பருத்தித்துறை —எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனத்தை 1974ம் ஆண்டு யூலை மாதம் 30-ம் திகதி (30-7-74) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாக விருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி பருத்தித்துறைக் கோவிற்பற்று புலோலி கிழக்கு வென்றிபாகு தேவன் குறிச்சியிறை "வடநிறை கலட்டி" நி. பர. 20, 5/8 இதில் தென்கிழக்குப் புறமாக ஆறிலொரு பங்குக்கான நி. பர 3 குளி 8, 5/8 இதற்கு 1961ம் ஆண்டு ஆடி மாதம் 27ம் திகதி உலாந்த மேஸ்தர் சி. சுப்பிரமணியம் அவர்களால் 955ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி நி. பர. 3 குளி 7, 20/32 இதற் குறித்த படத்தில் 2ம நம்பர்த் துண்டுக்கு நி பர 1 குளி 11, 20/32 தென்னைகள், வேம்பு, வீடுகளும், எல்லை கிழக்கு:- இளையதம்பி பரஞ்சோதிக்குடைய வாதனம், வடக்கு:- அழகையா பெண் பரமேஸ்வரிக்குடைய வாதனம், மேற்கு:- குறித்த படத்தில் 1ம் நம்பர்த் துண்டு தெற்கு:- வேலுப்பிள்ளை மயில்வாகனத்துக்குடைய வாதனம, இவவெல்லைக்குட் பட்டவைகளடங்கலும், வழிப்பாவிப்புக்காக விடப்பட்ட நிலம் குளி 12, 12/32 கொண்ட குறித்த படத்தில் 2ம் நம்பர்த் துண்டாகிய ஒழுங்கை நிலத்தில் இதற்குரிய பங்கும்.

(மதிப்பிட்ட விலை ரூபா 10, 495/-

| | | |
|---|---|---|
| தீர்வைத்தொகை: | ரூபாய் | 5,482 00 |
| வட்டி ரூபா 3,000/-க்கு 15 வீதப்படி 24-8-73 தொடக்கம் 27-11-73 வரை | ரூபாய் | 112 50 |
| வட்டி ரூபா 5594-50க்கு 5 வீதப்படி 27-11-73 தொடக்கம் 27-7-74 வரை | ரூபாய் | 186 48 |
| வட்டி ரூபா 5,780-98க்கு 5 வீதப்படி 27-7-74 தொடக்கம் விற்பனை வரை | ரூபாய் | 2 88 |
| கோட்டுச் செலவு | ரூபாய் | 150 00 |
| மொத்தம் | ரூபாய் | 5,933 86 |

ந. முத்துலிங்கம்
குமரகோட்டம்' நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பாளர்
வியாபாரிமூலை, ஏல விற்பனையாளர்
பருத்தித்துறை. 3-7-74 (தேசிய வீடமைப்புத் திணைக்களம்)
108, 12—7

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
வழ. இல. M B 13272

அமிர்தலிங்கம் சண்முகலிங்கம், 477/1, காங்கேசன்துறை ரோட் வண்ணார்பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம். —வழக்காளி
எதிராக
(1) பொன்னுத்துரை சுப்பிரமணியமும்
(2) பெண் ஜெயராணி
(3) இரத்தினசபாபதி கைம்பெண் இலங்கம்மா
எல்லோரும், திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம. —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 13272ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பினனால் விபரிக்கப்படும ஒரு துண்டுக்காணியை 1974ம் ஆண்டு ஆடி மாதம் 31-ந் திகதி (31-7-74) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 9,300/- 30-7-72 தொடக்கம 6-3-73 வரைககும் ரூபா 7,500/-க்கு 12 வீத வட்டியும் அதற்குப்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 583-90 சதம் செலவில் எதிராளிகளால் கொடுக்கப்பட்ட தொகை ரூபாய் 175/- நீக்கி

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று திருநெல்வேலி இறை 'பறையன் கலட்டி' ( Paraiyan Kaladdy Valavu ) இதன விஸ்தீரணம் நிலப்பரப்பு 3ம வீடும், பயிர் வகைகளும கிணற்றில் பங்கும், எல்லை கிழக்கு:- சுப்பையா இராமலிங்கம கந்தையாவின ஆதனம், வடக்கு:- அருணாசலம் கந்தையாவின் ஆதனம், மேற்கு:- முருகேசு கந்தையாவின கைம்பெண் பாக்கியத்தின் ஆதனம், தெற்கு:- ஒழுங்கை, இதடங்கலும் இதற்குள் சோந்தவைகளும்.

வே. கோபாலபிள்ளை
22 ஆஸ்பத்திரி வீதி, கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
யாழ்பபாணம். 20-6-74 109 12-7

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம் இல: 4289
சாவகச்சேரி சின்னத்துரை பெண் அன்னலெட்சுமி
எதிராக —வழக்காளி
(1) நாவற்குளி, கந்தன் கிட்ணனும் பெண்
இறந்த (2) பொன்னுவும் —எதிராளிகள்
(3) நாவற்குளி, முருகன் கந்தையா —பதில் எதிராளி

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தால் 4289ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப் பிரகாரம் கீழக்காணுமாதனவிடாப்பில் விபரிக்கப்படுமாதனம் 1974-ம் ஆண்டு ஆவணி மாதம் 12-ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவ்வக் காணிகளுக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 1900/-ந் 3-7-1972 தொடக்கம் தீர்வைத் திகதி 3-11-72 வரைக்கும் ரூபா 1250/-க்கு 12 வீத வட்டியும் பின் கூட்டிவரும் தொகைக்கு இறுக்கும்வரையும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 323/-

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி நாவற்குழிக் கோவிற்பற்று நாவற்குழியிறை 'நாவிதன் பிட்டிவளவு' நி. பர. (5) ஐந்துக்கெல்லை கிழக்கு - ஒழுங்கை, வடக்கு:- கந்தன் முருகனின் உரித்தாளருக்குரிய வாதனம், மேற்கு: இளையவன் மருதலிங்கத்துக்குரிய வாதனம், தெற்கு:- வல்லி நன்னிக்குரிய வாதனம். இவ்வெல்லைக்குள் அடங்கிய வீடுகள், தலைவாசல், தென்னைகள், வேம்புகள் மற்றும் பயிர்களடங்கிலும். யாழ்ப்பாணம் காணிப் பதிவுக் கந்தோரில் F. 137/138ம் பதியப்பட்டது.

(2) ஷை நாவற்குழியிறை 'மரக்காரைவளவு' நி பர. 3 குழி 11 ஷை குப்பையன் வளவு நி பர. 4 இருவகைக்கும் இப்போ ஒரே ஆதனமாக நி. பர. 7 குழி 11 இதில் தெற்குப் பக்கமாக அரைவாசிக்கு நி. பர. 3 குழி 14½ (மூன்று குழி பதினலரை) எல்லை கிழக்கு:- கோவிலாக்கண்டி கண்ணகை அம்மன் கோவிலுக்குரியவாதனம், வடக்கு:- செல்லன் பெண் செல்லத்துக்குரிய வாதனம், மேற்கு:- இளையவன் செல்லனுக்குரிய வாதனம், தெற்கு:- ஒழுங்கை, இவ்வெல்லைக்குள்ளடங்கியவைகளனைத்தும். இவ்வாதனம் யாழ்ப்பாணம் காணிப் பதிவுக் கந்தோரில் F 367/151 இல் பதியப்பட்டது.

மு. நா. மார்க்கண்டு
சாவகச்சேரி, 19-7-74. கொம்மிஷனர்.
104, 12—7

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M. B. 13354
'இந்துசாதனம்' 28-6-74 வெளிவந்த பிரசுரத்தின் திருத்தம்

(1) க. சண்முகமும் பெண் கனகசுந்தரியும்
இருவரும், காரைதீவு கிழக்கு —வழக்காளிகள்
எதிராக
(1) கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்
(2) பெண் சிவபாக்கியமும், இருவரும் விழானே, காரைதீவு கிழக்கு, காரைதீவு - எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 13354 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 3 துண்டுக்காணி 1974ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 5-ம் திகதி (5-8-74) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 6,750-00 பின் 1972ம் ஆண்டு புரட்டாதி மாதம் 6ம் திகதி தொடக்கம் 1973ம் ஆண்டு சித்திரை மாதம 10ம் திகதி வரை ரூபா 5,000-00க்கு 12 வீத வட்டியும் பின் முழுத்தொகையும் அறுபடும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 543-00

ஆதன விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவு கோவிற்பற்று காரைதீவு மேற்கு இறை 'தம்பன்' நெ. ப. 8½ எல்லை கிழக்கு:- மார்க்கண்டு கைம்பெண் சுந்தரம்மாவுக்கும் ஆறுமுகம் குமரேசுவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்கள், வடக்கு:- விசுவநாதர் முருகேசுவின் ஆதனம், மேற்கு:- இராமநாதர் விசுசித்தம்பியின் உரித்தாளரின் ஆதனம், தெற்கு:- சின்னப்பு பெண் தெய்வானையினுதனம். இது அடங்கலும் இதன் வடக்கெல்லைக் காணியில் தென்கிழக்குப் பக்கமாகவிருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் இறைவாய்க்கால் உருத்தும்.

(2) மேற்படி கிழக்கு இறை "இலந்தைக்குழிவயல்" நெ. ப. 14 குளி 4 தெற்கெல்லையிற் கிணற்றுப் பங்கும் எல்லை கிழக்கு:- கந்தையா சுப்பிரமணியத்தினுதனம் வடக்கு:- சின்னத்தம்பி கந்தையாவின் மகனினுதனம் மேற்கு:- வாய்க்கால் தெற்கு:- சுப்பிரமணியம் பெண் சிவபாக்கியத்தினுதனம் இது அடங்கலும்.

(3) மேற்படி கிழக்கு இறை இலட்சிங்கதேவன்புலம் நி. பர. 25 இதில் மேற்குப் பக்கமாக அறுதியாக விற்ற நி. ப. 12 நீக்கி மிகுதி நி. ப. 13 எல்லை கிழக்கும் வடக்கும்:- கனகசபை திருநாவுக்கரசுவினுதனம், மேற்கு கந்தையா கைம்பெண் பாக்கியத்தினுதனம், தெற்கு:- ஒழுங்கை இது அடங்கலும்.

"விதானை வளவு" சி. செ. மாரிமுத்து
சித்தன்கேணி, 1-7-74 கொம்பிசனரும் விலைமதிப்பாளரும்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B 13212
யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றத்தில்

அச்சுவேலி. அச்சுவேலி வடக்கு முருகன் சின்னத்தம்பி சின்னத்துரை —வழக்காளி
எதிராக
ஆனைக்கோட்டை தபாற்கந்தோர், சின்னப்பு றிச்சட் சொலமன் பொன்னையா —எதிராளி

M B 13212ம் இலக்க வழக்கில சம்பந்தப்பட்ட கீழ்க்காணும ஆதனம் 1974ம் ஆண்டு ஆகஸ்ற் (ஆவணி) மாதம் 15 ம திகதி [illegible] அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-
முதல் வட்டி ரூபா 4000/-மும் மேலும் ரூபா 3000/-கது 4-7-72 தொடக்கம் 30 - 1 - 73 வரைக்கும் வருடமொன்றுக்கு 8 வீத வட்டியும அதனபின் சேர்ந்த முழுத் தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 430 - 16 சதம் பவுண்டேச் மற்றும் விற்பனவுக்குரிய சலரர்களும்

ஆதன விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டை கோவிற்பற்று வட்டுக்கோட்டை மேற்கிறை "கலசம்புடையும் நாச்சாண்டியும்" நிலப்பரப்பு 2, குளி 7, 12/16 வான்பயிர் செய்பயிர்களும் இதற்கெல்லை கிழக்கு:- முருகன் கைம்பெண் மேரியின் உரிமைக்காரரினுதனம்; வடக்கு:- கை ஒழுங்கை, மேற்கு ரூபன் சாமியல சின்னையாவினுதனம், தெற்கு:- முருகுப்பிள்ளை கதிரவேலுப்பிள்ளையினுதனம். இதடங்கலும்

வி. செ. குட்டிப்பிள்ளை
கொமிசனர் & விலை மதிப்பாளர்
"இராசகிரி"
643, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம் 105-74

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்
வழ: இல. M B 12659

உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த 1. கந்தையா துரைசிங்கமும் அவரின் மனைவி 2. யோகம்மாவும் —வழக்காளிகள்
எதிராக
இணுவில் கிழக்கைச் சேர்ந்த சண்முகநாதன் செல்வராசா —எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தின் M. B. 12659-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1974 ம் ஆண்டு ஆவணி மாதம் 15-ம் திகதி (15-8-74) வியாழக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

தீர்வைத் தொகை: முதலும் வட்டியும் ரூபா 3574-30 சதமும் 24-7-1971 தொடக்கம் 1-8-72 வரைக்கும் ரூபா 2500 - க்கும் 10 வீத வட்டியும் அதன் பின் இறுக்கும்வரைமுழுத்தொகைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 316-55 சதமுமாகும். இதில் ரூபா 2000/- 22-5-1973 ற்குப் பின்பு கொடுக்கப்பட்டது-

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்கு உடுவில் கோவில்பற்று இணுவிலைச் சேர்ந்த பலத்த யோலையும், எமயிலை வளையுமென்று அழைக்கப்படும் நிலப் பரப்பு 12ம் 14 குளியும். ஆனல் 20-11-1966ம் திகதி உத்தரவு பெற்ற உலாந்தா எஸ். முத்துக்குமாரசாமி அவர்கள் அளந்து கீறிய 2975 ம் இலக்கப் படத்தின்படி இக்காணி மற்றைய காணிகளுடன் சேர்ந்து 22 பரப்பும் 12 . 6 குழியுமாகக் காணப்படுகிறது,

இந்தப் படத்தின்படி 6 ம் துண்டுக் காணியாகிய நிலப்பரப்பு இரண்டும் 13 குழியிலும் பனை மரங்களும் வடலிகளும் உள்ளன, மற்றைய நிலப் பரப்பு இரண்டினதும் எல்லை கிழக்கு சின்னத்தம்பி சின்னராசாவின் ஆதனமும எல்லை வடக்கில் படத்தில் கூறப்பட்ட 5ம் துண்டுக் காணியாகிய முத்துத்தம்பி கதிர்காமசேகரம் அல்லது சுவாமிநாதன் என்றழைக்கப்படுபவரினதும் அவரது மனைவி மனோரஞ்சிதத்தினது ஆதனமும், எல்லை மேற்கில் படத்தில் கூறியபடி 1ம், 4 ம் 5 ம் 6 ம் துண்டுக் காணிகளுக்குப் பிற நீங்கலாகச் செல்லும் பாதையும் எல்லை தெற்கில் கந்தன் குளந்தையினது ஆதனமும் உள்ளன, இதனடங்கிலும் இதற்குச் சொந்தமானவையும்,

சி. ஆ. த வடிவேலு J. P
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
ஏல விற்பனையாளரும்.
'வடிவேல் உதயம்''
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில், 27-6-74.
93 5-7-74

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தியாளர்களையும் ஏற்றுமதியாளர்களையும் எம்முடன் ஆங்கில மொழியில் தொடர்புகொள்ளுமாறு நாம் அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

# மேற்கு நைஜீரியாவுக்கு

# ஏற்றுமதி

வெல்டிங் மின்வாய்கள் நுண்ணிய வளைவுடன் 2 மி. மீ.,
மோட்டார் வாகனங்களுக்குரிய "வின்ட் ஸ்கிறீன்",
ட்ருன்சிஸ்டர் கசற் ரேப் றெக்கோடர்கள்,
கார் கார்ட்றிச் பிளேயர்ஸ்,
பெஸ்பெக்ற் 5 மி. மீ., அளவு 8' × 4', 6' × 4'
விமான அஞ்சற் கடித அட்டைகள்,
எல்லா வகையான கட்டிடப் பொருட்கள்,
பல்வேறு வகையான துணி வகைகள்,
வாள்சங்கிலிகள் ·063 அங். தடிப்பு; 4·04 அங். ஆழம்; 36" அங். நீளமுள்ள வழிச்சட்டங்களில் பயன்படுத்துவதற்கு,
அலுவலக உபகரணங்கள்,
விசிறு கருவிகள்,
வெஸ்பா டயர்கள்,
திரைகளுக்கான கம்பித் தடிகள்,
சங்கிலி வாள் அரங்கள் 7/32" அங்குலம்,
பெண்களுக்கும் ஆண்களுக்குமான சப்பாத்துக்களும் சான்டல்களும்,
சேட்டுக்கள்,
பெண்களுக்கான அரைக் கச்சைகள்,
காற்சட்டைகள்,
உதைபந்துகள்,
மேலாடைகள், உள்ளாடைகள், எல்லா வகையான றெடிமேட் உடுப்புக்கள்,
பைசிக்கிள் வண்டிகளும் அவற்றின் உதிரிப் பாகங்களும்,
தொப்பிகள்,
குல்லாய்கள்,
தட்டையான கம்பி வடங்கள் 3·029 மி. மீ. தடிப்புள்ளவை,
வெல்டிங் (ஒட்டும்) யந்திரங்கள்,
கம்பித் தடிகளுக்கான கொளுக்கிகளும் சாவிகளும்,
எல்லா வகையான மின்சார சாதனங்கள்,
கைக்கடிகாரங்கள்,
காப்புகள்,
கசெற் சி 60 & சி 90,
மோட்டார் வண்டி ஜாக்குகள்,
(ஒலிவ் எண்ணெய் உட்பட) எல்லா வகையான தகரத்தில் அடைக்கப்பட்ட உணவுகளும்.
மட்பாண்டங்கள் (பீங்கான்கள்),
படுக்கை விரிப்புக்கள்
தலையணை உறைகள், மற்றையனவும்.

விலை (*C. I. F.*), காப்புறுதி, கப்பற் கட்டணம் முதலியவை உட்பட விலைக்கூற்றும், சாம்பிள்களும் அஞ்சல் அலுவலகம் மூலம் விமானப் பொதி அஞ்சலில் நேரடியாகப் பின்வரும் நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்:-

## Taofiki Taokeed & Sons,

SW 8/427 B, Aiyankoya Street,
Oke-Ado, Ibadan, WESTERN NIGERIA.

ADVT. 964/74/0/1.

வான்முகில் வழாது பெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன் கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம், சைவ பரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை, காங்கேசன்துறை வீதி, 450ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச அச்சியந்திரசாலையில்
12—7—74 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது. பிரதம ஆசிரியர்: திரு. நம. சிவப்பிரகாசம்; ஆசிரியர்: மு. மயில்வாகனம்